செ.வெ.எண்: 523/2016 நாள்: 12.08.2016

**பத்திரிகை செய்தி**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு திட்டமான **"முழு சுகாதார தமிழகத்தை"** உருவாக்கிட தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் 95 கிராம ஊராட்சிகளிலும் **"திறந்தவெளி மலங்கழித்தல் இல்லை"** என்ற நிலையை உருவாக்கி அதனை தொடர்ந்து கடைபிடிக்க பல்வேறு முயற்சிகளை மாவட்ட நிர்வாகம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு, மாவட்ட அளவில் மனித சங்கிலி, பேரணிகள், கலந்தாய்வு கூட்டங்கள், மாரத்தான், விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக கிராமிய கலைஞர்கள் பங்குபெறும் சுகாதார விழிப்புணர்வு 24 மணி நேர நாதஸ்வர, தவில் இசை முழக்கம் வருகின்ற 13.08.2016 காலை 10 மணி முதல் 14.08.2016 காலை 10:00 மணி வரை நாகர்கோவில் வடசேரி பேருந்து நிலைய மைதானத்தில் வைத்து கலைத் தென்றல் M.முத்துசுவாமி மற்றும் கிராமிய கலை செல்வம் K.நடராஜன் ஆகியோர் நடத்த உள்ளனர்.

**"திறந்தவெளி மலங்கழித்தலற்ற குமரி"** என்ற சுகாதார விழிப்புணர்வு 24 மணி நேர நாதஸ்வர,தவில் இசை முழக்கத்தை மாவட்ட திட்ட இயக்குநர், **திருமதி.கெட்சி லீமா அமலினி அவர்கள் முன்னிலையில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் துவங்கி வைக்க உள்ளார்.** இந்நிகழ்ச்சியினை நாகர்கோவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தூய்மை பாரத இயக்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.N.சபரீஸ்வரன் மற்றும் கிராமிய கலைஞர் திரு.பழனியாபிள்ளை ஆகியோர் ஒருங்கிணைக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
நாகர்கோவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.